கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.1/2019

பி.வா.சா.1 - அன்பரசி

நாள்.25.11.2025 க/பெ - சுயம்பு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1) எனது தந்தை பெயர் என்ன என்றால் ஆறுமுக நாடார் ஆகும். ஆறுமுக நாடாருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் மூன்று பேர்கள் ஆகும். எனது தாயார் பெயர் அமிர்தகனி என்றால் சரிதான். எனது தந்தை ஆறுமுக நாடார் என்பவருக்கு சுப்பம்மாள் என்ற இரண்டாவது மனைவி உண்டு என்றால் சரியல்ல. மேற்படி சுப்பம்மாளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட தோட்டத்தில் மேற்படி சுப்பம்மாள் வேலை பார்த்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) வழக்கின் வாதி மயில்ராஜனை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கின் வாதி மயில்ராஜன் மேற்படி சுப்பம்மாளின் மகன் என்றால் சரிதான். வழக்கின் வாதி மயில்ராஜனின் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம் நான் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்த்ததில்லை. எனக்கு தமிழ் படிக்க தெரியுமா என்றால் படிக்க தெரியாது. வழக்கின் வாதி மயில்ராஜனின் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமத்தில் தந்தை பெயர் ஆறுமுக நாடார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வாதி கூறியதின் பேரில் அவ்வாறு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

3) மரபணு சோதனை செய்வது மூலம் வாதியும் நாங்களும் ஒரே தந்தைக்கு பிறந்தவர்கள் என்பதை நிரூபிக்க இயலும் நாங்கள் மரபணு சோதனை செய்வதற்கு தயாராக உள்ளோமா என்றால் இல்லை, யார் என்றே தெரியாது. உண்மை தெரிய வேண்டுமென்றால் மேற்படி சோதனைகள் செய்யப்பட வேண்டும் ஆனால் மேற்படி சோதனை செய்வதை நான் மறுப்பதில் இருந்து எனது கட்சி குறித்து ஐயம் ஏற்படுகிறது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலம் ஐயத்திற்குரியது என்றாலும், அது



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.11.25 17:41:09 +0530

ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

பி.வா.சா.1 குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை - இல்லை.

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.11.25 17:41:14 +0530